2. அறிக்கை அளித்தல்

உறுப்பினர்கள் திரு. மு.க. ஸ்டாலின் மற்றும் திரு. துரைமுருகன் மீதான அவை உரிமைக் குழுவின் அறிக்கை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அவை உரிமைக் குழுவின் அறிக்கையை அளித்தல். மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன், அவை உரிமைக் குழுவின் தலைவர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன் (பேரவைத் துணைத் தலைவர்): *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திராவிட முன்னேற்றக் கழக கட்சியைச் சார்ந்த திருவாளர்கள் மு.க. ஸ்டாலின் மற்றும் துரைமுருகன் ஆகியோர் மீதான உரிமை மீறல் பிரச்சினை குறித்த அவை உரிமைக் குழுவின் அறிக்கையினை குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.*

3. அரசினர் சட்டமுன்வடிவு (அறிமுகம் செய்தல்)

சென்னை மாநகர காவல் (சேலம், திருச்சிராப்பள்ளி மற்றும் திருநெல்வேலி மாநகரங்களுக்கு நீட்டிப்பு) திருத்தச் சட்டமுன்வடிவு, 2014

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அரசினர் சட்டமுன்வடிவு (அறிமுகம் செய்தல்). 2014 ஆம் ஆண்டு சென்னை மாநகர காவல் (சேலம், திருச்சிராப்பள்ளி மற்றும் திருநெல்வேலி மாநகரங்களுக்கு நீட்டிப்பு) திருத்தச் சட்டமுன்வடிவு. மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள்.*

மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

“2014 ஆம் ஆண்டு சென்னை மாநகர காவல் (சேலம், திருச்சிராப்பள்ளி மற்றும் திருநெல்வேலி மாநகரங்களுக்கு நீட்டிப்பு) திருத்தச் சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்”

எனக் கோருகிறேன்.